பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி — வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 28—6—51. விலை அரையணா. | வெற்றி 2[illegible]

பீடித் தொழிலாளர் சங்கம்.

11-ந் தேதியன்று ஷை சங்கக்கமிட்டிக் கூட்டம் தலைவர் பி. எஸ். நிஜாம் சாஹிப் தலைமையில் நடைபெற்றது. தற்போதைய தொழிலாளர்கள் நிலைமைகளையும் சங்கத்தைப்பலப்படுத்த வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், என். காதர்பாக்ஷா, சிவராமன், வி. மல்லையா மற்றும் பலர் பேசியபின்னர், தொழில்கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்தக்கோரியும் கூலி வெட்டு நோட்டீஸை வாபஸ் வாங்கும்படிகேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை நகர இளைஞர் காங்கிரஸ்.

15-ந் தேதியில் ஷை காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஜில்லா காரியதரிசி ஸ்ரீ கே. ராஜகோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் இளைஞர் கடமை என்பது பற்றி ஸ்ரீ ஆர். ஏ. டி. சண்முகத்தேவர், அ. பாசித் பேசிய பின்னர் புதிய நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்டது. தலைவர், ஸ்ரீ வே. குணவேல், உபதலைவர் ஸ்ரீ டி. காளியப்பா, காரியதரிசி ஸ்ரீ நா. கிருஷ்ணபாரதி, உதவி காரியதரிசிகள் பி. பாலுசாமி, எஸ். கே. ராமராஜ், பொக்கிஷதார் வி. சே. லக்ஷ்மணன் மற்றும் 9-கமிட்டி அங்கத்தினர்களும், மாணவர் பகுதி, மாணவிகள் பகுதி ஏற்படுத்தப்பட்டன. மாணவர் பகுதி தலைவர் டி. எம். காளியப்பா, மாணவிகள் பகுதி கன்வீனர் நா. கிருஷ்ணபாரதி, அங்கத்தினர்கள் கே. ரத்தினம், சி. எஸ். மீரா, சி. என். காந்தா, சி. எஸ். விமலா ஆகியோர்.

பத்திரிகை பறிமுதல்.

22-ம் தேதி நம் நகரில் சில கடைகளில் க[illegible]நேசன் என்ற ஆபாசப்பத்திரிகைப் பிரதிகளைப் போலீஸார் பறிமுதல் செய்தார் எனத்தெரிகிறது.

நேத்தாஜி!

"இளங்கதிர்"

வங்கத்தின் சிங்கமடா — அவர்
வாகையின் வீரரடா.
தங்கத்தின் ஒளியாக — என்றும்
தன்மையில் தியாகியடா.
ஐ. சி. எஸ். படித்தும் — அவர்
ஐரோப்பிய நாடு சென்றும்
ஐ. சி. எஸ். பதவி வந்தும் — அதில்
அடிமையாக வில்லை.
உத்தமர் காந்தி மகான் ... போஸ்
உழைப்பின் சுடர் மணியாம்.
எத்தனை இடர் வரினும் ... இன்று
எங்கு மறைந்தனனே?
கள்ள மிலாத் தியாகி ... அவர்
காந்தி வழி வீரன்.
உள்ளம் ஒடுங்கு துவே ... நினைத்தால்
உத்தம தீரன் செயல்!

தலைவர் பிரயாணம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் 28...6...51-ல் ரெட்டியாபட்டி, 29-ம் தேதி புதுக்கோட்டை 30-ம் தேதி மாயவரம், 1...7...51 ம் தேதி தஞ்சாவூர், 2-ம் தேதி புலிவலம் (நாகபட்டணம் தாலூக்கா) 3-ம் தேதி சென்னை சேருவாரெனத் தெரிகிறது.

தமிழரசுக் கழகக் கூட்டம்.

17-ம் தேதி ஷை கழகத்தின் அங்கத்தினர் கூட்டம் ஸ்ரீ முத்து தலைமையில் நடைபெற்றது. தமிழரசுக் கழகமும் இன்றைய நிலையும் என்பது பற்றி இரா. சுப்பிரமணியம், இளங்கதிர், பைந்தமிழன், நடராஜன், கிருஷ்ணசாமி, தண்டாயுதம் ஆகியோர் பேசிய பினனர் நகர6-வது அ. மகாநாட்டுக்கு வரும் ஜனப் எம். ஏ. ஷம்சுதீன் அவர்களுக்கு வரவேற்பளிக்கவும், நம் நகரசபைக் கவுன்விலர் ஒருவர் உள்ளூர் பத்திரிகை ஆசிரியர் மாமல்லனை, நகரச் சொத்தான குப்பையைக் க[illegible]த்த ஆதரவளித்து அவரை அடித்ததற்கு[illegible] கண்டித்தும், இந்தச் செய்கை நேரிட்டதற்[illegible] வருந்தியும் இனியாவது நிலைமை திருந்த[illegible] கேட்டுக்கொண்டும், மேலும் சில தீர்மான[illegible]கள் நிறைவேற்றப்பட்டன.

மறுமலர்ச்சி மன்றம்.

வடுகபாளையத்தில் ஷை மன்றத்தின் ஆ[illegible]ம்ப விழா தி[illegible]. அ. நல்லசாமி தலைமையி[illegible] நடைபெற்றது. மறுமலர்ச்சி என்பது ப[illegible] திருவாளர்கள் சி. சண்முகம், மருதமுத்[illegible] வெள்ளிங்கிரி, வேலுச்சாமி, சுப்பிரமணிய[illegible] ஆகியோர் பேசிய பின்னர் கமிட்டி ஒன்[illegible] அமைக்கப்பட்டது. வையாபுரி நன்றி கூ[illegible] கூட்டம் முடிவுற்றது.

ரேஷனிங் அட்வைசரிகமிட்டி

நாளது 30--6--51 ம் தேதி மாலை 5-ம[illegible]யளவில் நகர ரேஷனிங் அட்வைசரி கமி[illegible]டிக்கூட்டம் நடைபெறும் என நகாரேஷனி[illegible] ஆபீஸர் திரு. எம். நடராஜ முதலியார் தெ[illegible]விக்கிறார்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்,

298, இடையர் வீதி, கோயமுத்தூர்.

ஒரு வருஷத்தில் 14-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கும், 20-வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:- S. R. Chandran.

நடுரோடில் நடவாதீர்கள்.

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 28—6—51. வியாழன்.

ஸ்ரீ காமராஜ் விஜயம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் பொள்ளாச்சிக்கு விஜயம் செய்தார்கள். நகரகாங்கிரஸ் கமிட்டியார் சிறந்த முறையில் ஊர்வலம், மகாநாடு, பொதுக்கூட்டம் முதலியன ஏற்பாடு செய்திருந்தனர். பொள்ளாச்சியில் சமீப காலங்களில் எந்தக் கூட்டமும் இவ்வளவு பிரமாண்டமாகவும், அமைதியாகவும், ஒழுங்காகவும் நடைபெறவில்லை என்றே கூறலாம். ஊர்வலம், கொடியேற்றுவிழா சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மகாநாட்டு நிகழ்ச்சிகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றது. நகரின் முக்கியஸ்தர்கள், தாலூக்காவின் முக்கியஸ்தர்கள், காங்கிரஸ்காரர்கள், எம். எல். ஏ. உள்பட அனைவரும் காலை முதல் மாலை வரை கூட இருந்து சிறப்பித்தனர். குமரன் நாடக மன்றத்தினரின் "தேசத் தொண்டன்" நாடகம் இரவில் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடகம் பார்த்துவிட்டு மிகவும் சந்தோஷப்பட்டார். மொத்தத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. தலைவர் மிகவும் சந்தோஷப்பட்டார்.

பொதுவாக ஸ்ரீ காமராஜ் போன்ற தலைவர்களும், மந்திரிகளும் விஜயம் செய்தால் தான் நகரில் உள்ள எல்லாக் காங்கிரஸ்காரர்களும் கலந்து கொள்ளுகின்றனர். சாதாரண விழாக்கள், காங்கிரஸ் கூட்டங்களில் பலர் கலந்துகொள்வதில்லை. இது நகரில் பெரும் குறையாக இருக்கிறது. பெரிய தலைவர்கள் வரும்போது மட்டும் முன்னால் வந்து விடுகின்றனர். ஆனால் இவர்கள் காங்கிரஸ் ஸ்தானங்களுக்குமட்டும் போட்டி போட்டுக்கொண்டுவருகின்றனர். காங்கிரஸ் வேலைக்கு வருவதில்லை. இந்த நிலைமை மாறவேண்டும். காங்கிரஸ் கூட்டங்கள் எல்லா காங்கிரஸ்காரர்களும் கலந்துகொள்ளவேண்டும். அதைவிட்டு பெரிய தலைவர்கள் வந்தால் வருவது மற்ற காலங்களில் ஊரில் இருந்தாலும் வீட்டிலே இருந்து கொள்வது என்றால் இவர்கள் விரைவில் பொதுஜனஆதரவை இழந்து விடுவார்கள் என்பதை எச்சரிப்பதோடு, நகர 6-வது அரசியல் மகாநாட்டை சிறந்த முறையில் நடத்திய வரவேற்புக்கமிட்டியாரையும்பாராட்டுகிறோம்

6-வது அரசியல் மகாநாடு.

நம் நகர 6-வது அரசியல் மகாநாடு 26ந் தேதி காலையில் ஆரம்பமாயிற்று. காலையில் 9-மணிக்கு டிராவலர்ஸ் பங்களாவிலிருந்து ஸ்ரீ கே. காமராஜ் உள்பட எல்லாத் தலைவர்கள், பொதுமக்கள், ஊழியர்கள், இளைஞர்கள் உட்பட மாபெரும் ஊர்வலம் வாத்தியக் கோஷ்டிகளுடன் புறப்பட்டு தேர்நிலை அடைந்தது. அங்கு தேசியக் கொடியை சென்னை சட்டக் கல்லூரி மாணவி ஸ்ரீமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் ஏற்றுவித்தார். ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு கடைவீதி வழியாக நாராயண டாக்கீஸையடைந்து அங்கு ஸ்ரீமதி அனந்தநாயகி தங்கள் கொடி ஏற்றுவிழாப் பிரசங்கத்தை செய்தார். நகரகாங்கிரஸ் கமிட்டித்தலைவர் எம். ராமசாமி அனைவரையும் வரவேற்றார். மகாநாட்டுக்கு கே. காமராஜ் அவர்கள் தலைமை வகித்தார். மக்கள்வாமழைஅவசியம்தேவை இவ்வருடம் மழை ஏதோ சுமாராகப்பெய்திருக்கிறது. அதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டியதே மற்ற கட்சிக்காரர்கள் மழையே பெய்யக்கூடாது, மக்கள் பட்டினி கிடக்கவேண்டும், தாங்கள் தான் ஆட்சிக்கு வரவேண்டுமென்று எண்ணுகிறார்கள். இவர்களுக்கு கொள்கையோ அரசியலோ தெரியுமா? இவர்கள் ஒழிவதே மேல். இவர்களுக்கு தேர்தலுக்கு நிற்க திட்டம் கிடையாது. இவர்களின் போட்டியினால் ஒரு நன்மையும் ஏற்படாது. இவர்களைபற்றி கவலைவேண்டாம். காங்கிரஸ்தான் ஜெயிக்கும். ஆனால் காங்கிரஸின் பொறுப்பு என்ன! கடமை, உணர்ச்சி, நேர்மையுள்ளவர்களைத்தான் நிற்க வைக்கும். மக்கள் சக்தி காங்கிரஸ். அதை அழிக்கயாராலும்முடியாது. மக்களும் சர்க்காரும் ஒன்றுபட்டு நடத்தப்பட வேண்டுமென்று கூறினார். பின்னர் மகாநாட்டை காண்டீபம் ஆசிரியர் எஸ் எஸ். மாரிசாமி திறப்பு விழா செய்து பேசியதாவது, உலகமெங்கும் நெருக்கடியான நிலையில் மகாநாடுகளின் அவசியம். இந்திய நிலை, மனிதனுக்கு இன்றுஏற்பட்டிருக்கும் உணவு, உடை, இடம் நெருக்கடி இது நம் நாட்டில் மட்டுமல்ல. உலகமே இந்நிலையில் இருக்கிறது. இந்நிலை மாற உழைப்பு, கட்டுப்பாடு, ஐக்கியம் இருந்தால் தான் தேசம் முன்னேறும் என்றும் கூறினார். பின்னர் மகாத்மாவின் உருவப்படத்தை ஸ்ரீ டி. எஸ். பட்டாபிராமன் எம். எல். ஏ அவர்கள் திறந்து வைத்து மிக உருக்கமாகப் அழகாகப் பேசினார். கடைசியில் திராவிடக்கம்பெனியிலிருந்து பிரிந்து வந்த வவ்வாலடி ஜனாப் எம். ஏ. ஷம்சுதீன் அவர்கள் ஹாஸ்யமாக திராவிடத்தாரின் திருவிளையாடல்களைப் பற்றிப்பேசினார். பின்னர் 15-தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் ஸ்ரீ காமராஜ் முடிவுரைக்குப் பின்னர் நம் ஆசிரியர் ஸ்ரீ பி. எஸ். வேலுசாமி அவர்கள் நன்றிகூற மகாநாடு இனிது முடிவுற்றது மாலை 6-30 மணிக்கு மயிலஞ்சந்தையில் நா. மகாலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ காமராஜ், ஷம்சுதீன், மாரிசாமி, ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்டர் ஸ்ரீமதி டி. என். அனந்தநாயகி, ஸ்ரீ பட்டாபிராமன் ஆகியோர் தற்கால அரசியல் நிலை குறித்து சொற்பொழிவாற்றினார்கள். பொதுக்கூட்டத்திற்குப்பின் இரவு 10-மணிக்கு பகவான் டாக்கீஸில் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் முன்னிலையில் இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி அ. பாசித் எழுதிய தேசத் தொண்டன் என்ற தேசீய நாடகம் நடைபெற்றது தலைவர், சுதாசிரியரையும், நடிகர்கள், டைரக்டர் இவர்களைப்பாராட்டி இதுபோன்ற நாடகங்களின் அவசியம் பற்றி பேசினார். தலைவருக்கு நாடக மன்றத்தின் சார்பில் நாடக டைரக்டர் ஆர். வாசுதேவன் மாலை சூட்டி வரவேற்றார். ஆர். தங்கவேலு பாம்பு நடனம் ஆடிய பின் மகாத்மா காந்திஜியின் சிலைக்கு புஷ்ப மாரி பெய்ய வர்ண விளக்குகள் மாறி மாறி எடுத்துக்காட்ட மக்களின் ஆரவாரம் காண ஒரே ஆனந்தமாக இருந்தது

மந்திரி விஜயம்.

மராமத்து இலாகா மந்திரி கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் 30-ம் தேதி உடுமலை செல்லுகிறார். 1—7—51 ந் தேதி ஞாயிறு அன்று ஆனைமலைக்கு விஜயம் செய்து பஞ்சாயத்து போர்டின் தங்கவிழாவை ஆரம்பித்து வைக்கிறார். டி விழாவுக்கு கோவை ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீ. வி. கே. பழனிசாமி கவுண்டர் தலைமைதாங்குகிறார். ஸ்ரீ பி. ஆர். கந்தசாமிக் கவுண்டர் எம். எல். ஏ. கொடியேற்றுவார். மந்திரி இரவு சென்னை புறப்படுகிறார்.

நேயர் தபால்.

நம் நகரிலுள்ள முனிசிபல்உயர்நிலைப்பள்ளியருகில் 4-ரோடுகள் சந்திக்கின்றன. ஆனால் அந்த ரோடுகள் எந்தெந்த ஊருக்கு செல்லுகின்றன என்று வெளியூர்காரர்களுக்கு தெரி

[3-ம் பக்கம் பார்க்கவும்.]

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

தரத்தில் உயர்ந்தவை
வெண்புரு பீடிகள்.

S. P. M. கொடி மஜீத் பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. B. செட்டியார்.

P பட்டாபி செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்ட
முள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

தினமணி & கதிர்
கிடைக்குமிடம்
ஜகதீஸ் & கோ., கடை வீதி.

நீங்கள் சந்தித்தீர்களா.........?
டாக்டர் V. T. சாமுவேல் M.R.C.M.
விநாயகர் கோவில் வீதி, பொள்ளாச்சி.

கண்டியம்மன் கம்பெனி.
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார் ஆயில் என்ஜின், பம்பு
செட்டுகள் எலக்ட்ரிக் சாமான்கள்,
மற்றும் மெஷினரி சாமான்களும்
குறைந்த விலையில் எங்கள்
கம்பெனியில் கிடைக்கும்.

உரிமையாளர்:-
C. ரங்கசாமி கவுண்டர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

யாமல் அவ்விடம் வந்து பள்ளி மாணவர்களிடம் கேட்டு தெரிந்து செல்கிறார்கள். அதற்கு உடனடியாக நகர முனிசிபாலிடியாரால் அங்கு திசைக்காட்டி போர்டு அவசியம் வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(டி. கே. சாமி)

கேள்வி—பதில்.

கே:- சிவஞானத்தை எங்கள் ஊருக்கு பேச அழைத்தால் வருவாரா?

அவருக்கு என்ன வயதாகிறது. எங்கு பிறந்தார்?

(இளந்தமிழன்.)

ப:- அவகாசமிருந்தால் தாராளமாகப் பேச வருவார். எழுதிக் கேளுங்கள். அவருக்கு சுமார் 42-வயதாகிறது. சென்னையில் பிறந்தார்.

கே:- கண்டவர் கண்ட விதமாகக் கேள்விகள் கேட்டால் போடுவதுதான் நியாயமா?

நம் நாட்டில் திராவிட கழகத்தை ஒழிப்பதற்கு வழி என்ன? (டி. வேலுசாமி)

ப:- கண்டவர்கள் கண்ட விதமாகக் கேள்வி கேட்டால் அதைக்குப்பைத்தொட்டியில் போடுவது தானே நியாயம்.

நாட்டில் நஞ்சைப் பரப்பிவரும் இந்த நாசகாரக் கும்பலை ஒழிக்க ஒருவழியும் வேண்டாம். கூடிய சீக்கிரம்மக்களே இவர்களின் கருந்திரை கிழித்து ஒழித்துவிடுவார்கள் இதை ஒழிக்க தளபதிகள் வேண்டாம், அறப்போர் வேண்டாம். மக்கள் எண்ணமே போதும் தானே ஒழிந்து விடுவார்கள்.

கே:- 26-ம் தேதி நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் ஸ்ரீ காமராஜ் பேசினார். நம் பள்ளி அதாவது முனிசிபல் உயர்நிலைப்பள்ளி அரசியல் சட்டத்தை அனுசரித்து நடத்தப்படுகிறது. மகாநாடு நடைபெற்றபொழுது மாணவர்கள் அதைப்பார்ப்பதற்கு ஏன் அவகாசம் கொடுக்கவில்லை? கொடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன? கொடுக்காமல் இருப்பது நியாயமா?

(மாணவன் சமத்தூர் ராம ஐயங்கார். முனிசிபல் உயர்நிலைப்பள்ளி.)

ப:- தம்பி பள்ளிக்கும் மகாநாட்டிற்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் நீ மகாநாட்டில் கேட்கவேண்டிய பிரசங்கம் மாலையில் பொதுக்கூட்டத்தில் கேட்டிருக்கலாம்.

வரவேற்புக் கூட்டம்.

26-ந் தேதி மாலையில் நகர அரசியல் மகாநாட்டுப் பேச்சாளரில் ஒருவரான தஞ்சை, வவ்வாலடி ஜனாப் எம். ஏ. ஷம்சுதீன் அவர்களுக்கு நகர தமிழரசுக் கழகம், மாணவர் தமிழரசுக்கழகத்தின் சார்பில் திருவள்ளுவர் நிலையக் கட்டிடத்தில் ஷியாருக்கு ஒரு வரவேற்பு ஸ்ரீ தி. தசாமி தலைமையில் நடைபெற்றது. இரா சுப்ரமணியம் வரவேற்புக் கூறி ஜனாப் ஷம்சுதீன் அவர்களுக்கு வரவேற்புக் கூறியும் தமிரசுக்கழகம் பற்றி நடராசன், இளங்கதிர், பைந்தமிழன், கி. ஆனந்தம், இரா. சுப்ரமணியம் யோர் விரிவாகப் பேசினார்கள். தனக்கு த்த வரவேற்புப் பாராட்டுதலுக்கு ஜ ஷம்சுதீன் நன்றி தெரிவித்து தி விடக் கழகத்தினரின் ஊழ அதன் மோசடித்திட்டம், பொய்ப்பி சாரம் ஆகியவற்றை விளக்கமாகக்கூறி தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூட்டம் முடிவுற்றது.

சுடச்சுட!?

(அ. பாசி

● காங்கிரஸை பழிக்க இன்னும் தனை மணியம்மைகளும், ஈ. வெ. ரா. க்களும் தோன்றினாலும் முடியாது.

(டி. என். அனந்தநாயகி)

ஒரு மணியம்மை தோன்றியே ஒ பெரியார் கெட்டார். பல மணியம்மைக தோன்றினால் காங்கிரஸ் ஒன்றும் யாது. ஈ வெ. ரா, பெரியார்கள் தா ஒழிவார்கள்.

● பகலில் மீட்டிங் இரவில் ஷூட்டி செய்யும் அண்ணாத்துரை கைத்தறியா களுக்கு என்ன நன்மை செய்ய முடியு

(டி எஸ். பட்டாபிராமன்

மீட்டிங்கில் டீ பார்ட்டியும், ஷூட்டி கில் பிரயாணியும் சாப்பிட முடியும்.

● திராவிட இயக்கத்தாருக்கு திட் மோ, கொள்கையோ கிடையாது.

(தலைவர் ஸ்ரீ காமரா

திட்டுவதே திட்டம், கொள்ளையடி பதே இவர்கள் கொள்கை என்று கூறு றான் நம்ம பிரஸ் பையன்.

● ஐயர் கலியாணத்திற்கு வந்தால் ரூபாய், அண்ணாத்துரை, பெரியார் மு னிலையில் நடத்ினால் 150-ரூபாய் கொ க்கவேண்டும்.

(டி. எஸ். பட்டாபிராமன்

என் கல்யாணத்திற்கு நான் 21- தானே செலவுசெய்தேன் என்று ஈ. வெ ரா. கூறுகிறார்.

● வெள்ளையனை அடிவருடிய திராவி க்கும்பல் இன்று நம் சுதந்திர சர்க்கா குறை கூறுவதேன்.

[எஸ். எஸ். மாரிசாமி.

சர்க்காரை குறைகூறா விட்டால் இ தாஸானு தாஸர்கள் ஜனங்களை ஏமாற்றி கள் வயிறு கழுவ முடியுமா?

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:
P. A. ரஹீம் சாயபு,
பல்லடம்.

ஏஜண்ட்:
A. K. யாகூப் சாயபு,
பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி
உபயோகியுங்கள்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.